# ஊடக அறிக்கை

**“Lanka Stat” செயலி மற்றும்**

**“Lanka Stat Map”இணையத்தள வெளியீடு**

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு**

**தொ.பேசி: 011 2147401** **தொ.நகல்: 011 2147412** **26 April, 2017**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களமானது, அதன் முதலாவது அலைபேசி தரவு பரவல் செயலியான "**Lanka stat**" இனை 26 ஆம் திகதி ஏப்ரல், 2017 இல் வெளியிடப்பட்டுள்ளதாக தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், கலாநிதி அமர சத்ரசிங்க அவர்கள் தெரிவித்தார். இதன் முதற்கட்டமாக "**Lanka Stat**" எனும் அலைபேசி பயன்பாட்டு மென்பொருளானது அன்ரோய்ட் இயங்கு தளத்தினை அடிப்படையாகக் கொண்ட டப்லட் கணினிகள் உள்ளடங்கலான ஸ்மாட் போன்களில் இயங்கக்கூடியது.

தரவுகளைப் பெறும் அலைபேசி பயனர்களுக்கு, நேரடியாகவே திணைக்களத்தினால் அனுப்பப்படும் மக்கள் தொகை மற்றும் சமூக பொருளாதாரச் சுட்டிகளை, நேரம் தவறாமலும், செயற்றிறனுடனும் தரவுப் பரம்பலை மேற்கொள்வதே இவ் அபிவிருத்தியினது பிரதான நோக்கமாகும். இவ் **“Lanka stat”** எனும் அன்ரோயிட் செயலியினை அன்ரோய்ட் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட ஸ்மாட் போன்களில் நீங்கள் நிறுவிக்கொள்வதற்கு கூகிள் பிளே ஸ்ரோர் இல் "**Lanka stat**" எனும் சொற்களைத் தேடுவதன் மூலம் நிறுவிக் கொள்ளமுடியும்.




**“Lanka Stat”** செயலியினை நிறுவியுள்ள ஸ்மாட் போன்களில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் புதிய புள்ளிவிபரங்கள் வெளியிடப்பட்டவுடன் அவற்றினை உடனடியாகவும், தொடர்ச்சியாகவும் இற்றைப்படுத்திக்கொள்ளுமாறு **(Update)** தரவுகளைப் பயன்படுத்திக்கொள்ளும் பயனர் அனைவருக்கும் திணைக்களத்தினால் அப்புள்ளிவிபரங்களின் இற்றைப்படுத்தும் தகவலானது உடனடியாகவே போன்களின் திரைகளில் காட்சிப்படுத்தப்படும்.

திணைக்களமானது புள்ளிவிபரத் தகவல்களைப் பயன்படுத்துவோருக்கு உரிய நேரத்தில் அப் புள்ளிவிபரத் தகவல்களைப் பரப்புவதற்கு மேலும் வசதியேற்படுத்துவதோடு, ஆதார அடிப்படையிலான முடிவுகளை மேற்கொள்வதற்குமான ஊக்குவித்தல் செயற்பாடுகளுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார்ந்த கருவிகளைப் பயன்படுத்த முன்னுரிமை அளிக்கின்றது.

இவற்றை விட திணைக்களமானது **2017** ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி அதன் இணைய வலைக் குடும்பத்திற்கு புதிய உறுப்பினராக **“LankaStatMap”** எனும் துணை இணையத்தளம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இத் துணை இணையத்தளத்தினை நீங்கள் எந்தவொரு தனிக் கணினியை பயன்படுத்தியோ அல்லது **“map.statistics.gov.lk”** எனும் உத்தியோக பூர்வ இணையத்தள முகவரியைப் பயன்படுத்தியோ ஸ்மாட் போன்களில் அல்லது தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் பிரதான இணையத்தளமான

**“www.statistics.gov.lk”** இன் முகப்புப் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பு மூலம் அணுக முடியும். தளத்தில் புவியியல் வரைபடங்களைப் பயன்படுத்தி பல்வேறு கண்ணோட்டங்களில் நிர்வாக அலகுகள்(மாகாணம், மாவட்டம், பிரதேச செயலகம் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு) ஆகியவற்றிக்கு தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் வழங்கிய புள்ளி விபரங்களின் புவியியல் வெளி சார்ந்த வேறுபாடுகளைக் காட்சிப்படுத்த முடியும்.




தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளைப் பயன்படுத்தும் தரவுப் பயனர்கள் **LankaStatMap** துணை இணையத்தளத்தினை பயன்படுத்தும்போது அவர்களால் செயற்கைகோள் படங்கள் மற்றும் அணுகு பாதைகளின் வரைபடங்கள் ஆகிய வெவ்வேறு வகைகளில் கிடைக்கக்கூடியவாறு உள்ள புவியியல் தகவல்கள் அடங்கிய பிராந்திய ரீதியாக காட்சிப்படுத்தப்படும் புள்ளிவிபரங்களை ஒப்பிடுவதற்கும், பகுப்பாய்வு செய்து கொள்வதற்கும் உதவுவதே இதன் பிரதான நன்மையாகும். முதற்கட்டமாக, இலங்கை குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2012 இன்போது சேகரிக்கப்பட்ட தகவல்கள் **LankaStatMap** எனும் துணை இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இத் தரவுகள் மாகாண நிர்வாக மட்டத்திலிருந்து நாட்டின் அதிதாழ் நிலையிலுள்ள நிர்வாக மட்டமான கிராம உத்தியோகத்தர் பிரிவு வரை எல்லா தரவுப்பரம்பலையும் கொண்டிருக்கிறது. நீங்கள் ஓர் நிர்வாக பரப்பை தெரிவு செய்வதன் மூலம் அந் நிலப்பரப்புத் தொடர்பான அனைத்துத் தரவுகளும் மேலே காட்டப்பட்டவாறு காட்சிப்படுத்தப்படுவதோடு, பகுப்பாய்வு செய்து கொள்ளவும் முடியும்.

**LankaStatMap** எனும் துணை இணையத்தளத்தின் அபிவிருத்தியானது நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தேவையான தரவுகளை வழங்கும் வழிமுறைகளை ஏற்படுத்தும் ஓர் திருப்பு முனையாக அமைவதோடு, முடிவுகளை மேற்கொள்வோருக்கு கூடிய வலுவை வழங்குவதுடன் நாட்டின் நீண்டகாலத் தேவையை பூர்த்தி செய்வதற்கான புவியியல் தகவல்களை எல்லா நிர்வாக அலகுகள் ரீதியான புள்ளி விபரங்களை பரப்புவதற்கு கூடியளவு பயன்பாடுகளை கொண்டிருக்கிறது.

பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்